Arimaa Nokku

# அரிமா நோக்கு

18 : 2 சூலை 2024

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

ISSN 2320-4842

அரிமா நோக்கு

18:2 ஜூலை 2024

ஆசிரியர்

ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்

வ. ஜெயதேவன்

ஆசிரியர் குழு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

ஒப்பிலா மதிவாணன்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

அறிவுரைக் குழு

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்

இரா. பன்னிருகைவடிவேலன்

259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096

arimaanokkuu@gmail.com

+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

| | |
|---|---|
| புலவர் குழந்தையின் பன்முக ஆளுமை<br>கோ. பழனி | 5 |
| புறநானூற்றில் விளிம்பு நிலை வாழ்வியல்<br>முனைவர் மு. வையாபுரி | 10 |
| நகரத்தார் வழிபாட்டில் நாயன்மார்கள்<br>முனைவர் சி. சிதம்பரம் | 21 |
| நாட்டுப்புறக் கதையின் தோற்றமும் அதன் நடையும்<br>மா. மணி | 26 |
| குடும்ப விளக்கில் பண்பாட்டு விழுமியங்கள்<br>முனைவர் க. சிவக்குமார் | 31 |
| பழமொழிகள் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>இரா.பிரபாவதி | 35 |
| கிறித்தவ அம்மானைகள் காட்டும் புனிதர்களின் வாழ்வியல்<br>யா. ஆரோக்கிய நாயகம்மாள் | 41 |
| புறநானூற்றுப் புறத்திணைச் சமூகமும்<br>அரசாளுமைக் கட்டமைப்பும் - பெ. ஜெயந்தி | 49 |
| ஐங்குறுநூறு உணர்த்தும் தோழியின் உணர்வு<br>வெளிப்பாடு - முனைவர் நா. சிவகுரு | 56 |
| நற்றிணையில் மகளிர் வாழ்வியல்<br>முனைவர் கா. கலைச்செல்வி | 64 |
| பூமணியின் படைப்புகளில் வட்டாரக் கூறுகள்<br>முனைவர் பொ. அருள் | 68 |
| வில்லிபாரதத்தில் இணைப்பொருட்கள்<br>கு. வினோத்குமார் | 74 |
| அஞ்ஞாடி நாவலில் பெண்ணியப் பார்வையில்<br>பெண் பாத்திரப்படைப்புகள் - க. திலகா | 79 |
| குமரகுருபரரின் - இலக்கியக் கொள்கை - பெ. அஜித் | 85 |
| போகரும் பயண இலக்கியமும்<br>முனைவர் வெ. சிவசங்கர் | 89 |
| சீறாப்புராணத்தில் நானில வளங்கள்<br>அ. ஹாஜிரா பேகம் | 92 |
| குடியேற்ற நகர தாலாட்டில் சமூகவியல்<br>பி. வசந்தபிரியா | 96 |
| சமவெளி காட்டுநாயக்கனின் வாழ்வியல் முறைகள்<br>முனைவர் த. நாகம்மாள்-முனைவர் அ. லட்சுமி | 100 |
| பக்தி இலக்கியத்தில் ஆடற்கலை<br>ச. விஜயலட்சுமி | 106 |
| பாடநூல் பயிற்றுவிக்கும் பொருள் இலக்கணம்-பண்பாடு<br>வே. அமிர்தம் | 112 |
| The significance of Dargah in fostering inter-religious cooperation in the neighbourhood: A Case study of Athankarai Pallivasal, Tirunelveli - IJAS K.A | 124 |

ISSN 2320-4842

# போகரும் பயண இலக்கியமும்

**முனைவர் வெ. சிவசங்கர்**

பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

பல்லாவரம், சென்னை – 600117

## ஆய்வுச் சுருக்கம்

சித்தர் இலக்கியம் பற்றிய அறிதல் என்பது சமூக வாழ்வியலோடு இணைந்தது. அறிவு நிலையில் இருந்து இயங்கக்கூடிய சித்தர்கள் பற்றிய அறிதல் என்பது காலத்தின் தேவை என்றாலும் அது மிகையாக இருக்காது. அந்த வகையில் சித்தர்களின் வரிசையில் போற்றப்பட வேண்டியவராய் போகர் சித்தர் இருக்கிறார். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயரும் அனைத்தையுமே பயணம் என்றால், பிறப்பு என்பது முதல் பயணம் என்றால் அது மிகையாகாது. போகர் சித்தர் பல்வேறு இடங்களுக்குச் சென்று மானுட வாழ்வு நோயின்றி அமைவதற்கான மருத்துவச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள மருத்துவச் செய்திகள் பற்றியும், அவர் மேற்கொண்ட பயணங்கள் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றன.

## முன்னுரை

சித்தர்கள் என்றால் சித்திப் பெற்றவர்கள். சித்தி என்பது வெற்றி என்று பொருளாகும். சித்தத்தை அடக்கியது மட்டுமல்லாமல்

**தன்னை அறிய தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே** (1)

இவ்வாறு தன்னை அறிவதே முதன்மையாக கொண்டு வாழ்பவர்கள் சித்தர்கள். அவர்களின் வாழ்வியல் என்பது பயணங்கள் கொண்டு அமைந்திருந்தது. அதனை அறியும் நோக்கில் சித்தர்கள் மேற்கொண்ட பயணங்களை முன்வைத்து அவர்களின் வாழ்வியல் நிலையை இலக்கியங்களே உலகிற்கு உணர்த்துகின்றன.

## போகரும் பயணமும்

சித்தர்களின் பரமகுருவாகத் திகழ்பவர் எம்பிரான் சிவபெருமான். நவகோடி சித்தர்கள் உள்ளனர், ஆயினும் பிரதானமாகக் கருதப்படுபவர்கள், பதின்மரே, அதிலும் போகநாதர் தனிச் சிறப்போடுத் திகழ்கிறார்.

வைகாசி மாதம் பரணி நட்சத்திரத்தில் தோன்றிய இவர் அகத்தியரையும் தன்

குருவாக ஏற்று 300 ஆண்டுகள் 18 நாட்கள் தன்னுடலோடு வாழ்ந்தவர் என்றும், பிறகு சீனதேசம் சென்று அங்கு காயகற்பம் உட்கொண்டு மேலும் 12 ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக தம் பாடலில் குறிப்பிடுகின்றார்(2).

போகரும் பயணமும் என்றும் பிரிக்க முடியாது வாழ்வியல் எனலாம். தனது குருநாதரான காலாங்கி நாதரின் உபயத்தால் போகர் காயகற்பம் செய்யும் முறையை கற்றுக் கொண்டார். போகர் தான் வடிவமைத்த வான்ரதத்தைக் கொண்டு அனேகமாக உலகம் முழுவதும் சுற்றி வந்து விட்டார் எனலாம். அவரது வான்ரதத்தைப் பற்றிய குறிப்பு சப்தகாண்டம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

## ரோமாபுரி

சீனாவிலிருந்து கிளம்பி தூரத்து நாடுகளான ரோம், மெக்கா மற்றும் பல தேசங்களைத் தன் சீடர்களோடு மட்டுமல்லாது திரளான மக்களையும் பல ரதங்களில் ஏற்றிக் கொண்டு உலகச் சுற்றுலாச் சென்ற முதல் சித்தர் போகராகத்தான் இருக்க முடியும். இவற்றையெல்லாம் அவரே தம் பாடல் வாயிலாக கூறியிருக்கிறார்

கொண்டபடி செனங்களெல்லாம் ஏத்திக்

கொண்டு கோர்வையுடன்
ஆயிரமாம்ரதங்கள் மாட்டி

அண்டர்முனி ராட்சகர்கள் கிடுகிடுக்க

அவனியெல்லாம் சுத்திவந்தேன்
அன்பாய்தானே (4)

ரோமாபுரியில் (இஸ்ரவேலர்கள்) தேர்வேந்தர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இவ்வாறு உலகச் சுற்றுலாச் சென்று உலக மக்களை தாம் செய்த ரதத்தில் ஏற்றி ரோம் நகரினை உலா சென்றுள்ளார் நம் அதிசய சித்தர் போகர்.

தானான ரோமபுரி சுத்திவந்

தேன் தாக்கான யெண்ணாயிரம்

காதமப்பா

வேனான சித்தர்களை ஏற்றிக் கொண்டு

வேகமுடன் தானடத்தி வந்தேனப்பா (5)

## சீனப் பயணம்

காசியில் பிறந்து கஞ்சமலையில் பலகாலம் வாழ்ந்த காலாங்கி நாதர் தனக்கு சமாதி முகம் செல்ல வேண்டும் என்று எண்ணம் தோன்றவே தன் விருப்பத்தை ஆன்ம ஆற்றல் வாயிலாக சீனாவிலிருந்து இந்தியாவில் உள்ள தனது சீடரான போகருக்கு உணர்த்தி னார். குருநாதரின் விருப்பத்திற்கிணங்க சீனப்பயணம் மேற்கொண்டார் போகர். பல சிறப்பான மருத்துவ முறை மற்றும் சூத்திரங்களை'யும் பின் தேகத்தை புதுப்பித்துக் கொண்டு இன்னும் பன்னெடுங்காலம் வாழும் இரகசியங் களையும் தன் சீனப் பயணத்தின் வழி அறிந்துகொண்ட போகர், அங்குள்ள மக்களுக்கு யோகம், மருத்துவம் முதலிய வற்றை போதித்ததோடு பயனுள்ள பல அறிவியல் கண்டுபிடிப்புகளையும் அதன் மூலம் பல தொழிற்சாலைகளையும் உருவாக்கினார் போகர். போகர் சீன விஜயம் முடித்துக்கொண்டுத் தென்னகம் நோக்கி வரும்பொழுது இமயமலையில் சிவபெருமானை தரிசனம் செய்தார். சிவபெருமான் அருளிய யோகக்கலையி னையும் மருத்துவ சாரத்தையும் உலகமக்கள் அனைவரும் பிணியின்றி வாழ தம் பாடல்கள் வாயிலாக வழங்கினார் போகர்.

அறைந்திட்டேன் எழுலட்சம்
கிரந்தந்தன்னை

அன்பாக அதிசயங்களெல்ல்ம் பார்த்து

குறைந்திட்டேன் போகரேழாயிரமாக

கூறினே லோகத்து மாந்தர்க்காக

வுறைந்திட்டேன் சீனதேசம் யானும்
சென்று

பாடினேன் போகரிஷி புகலுவேனே(6)

இமயமலையில் இறைவன் அருளிய

ஞானத்தினால் போகர் ஏழாயிரம் என்னும் மாபெரும் நன்னூல் கிடைக்கப் பெற்றது எனலாம்.

## பழனி மலை

போகரின் தலைமையில் முருகப் பெருமான் அருளாசியோடும் 81 சித்தர் கள் ஒன்று சேர்ந்து 81 வகையான வஸ்துக்களைக் கலந்து ஒன்பது கலவை கள் ஆக்கி பாஷாணக்கட்டினை 9 விதமான எரிப்பொருட்கள் கொண்டு காய்ச்சி 81 முறை வடிகட்டி சுத்தி செய்யப்பட்டதாக அவரது நூல்களில் வழங்கியுள்ளார் (7). இந்த வகை பாஷாணங்களைக் கலந்து கலவையாகக் கட்டும் வரை அதை செய்பவர்கள் சுவாசிக்கக் கூடாது என்பது குறிப்பிடத் தக்கது. போகரின் வழிகாட்டுதலின் பேரில் அத்தனை பேரும் சித்திபெற்ற பிராணயாமத்தைக் கடைப்பிடித்து மூச்சை அடக்கும் திறன் கொண்டு இச்சிறப்புமிக்க செயலைச் செவ்வனே செய்து முடித்தனர் எனலாம். இந்த நவ பாஷாணங்களைக் கொண்டே பழனி முருகனின் சிலையினைச் செய்தார் போகர் எனலாம். போகர் தனது நவபாஷண சிலைகளுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் சதுரகிரி மலைக்குச் சென்று அங்குள்ள மூலிகை களில் சுத்தி செய்து கொண்டு சென்ற தாகத் தனது போகர் ஜனன சாகரம் நூலில் விரிவாக வழங்கியுள்ளார்.

உலக மாந்தர்கள் பிணியினை நீக்க இந்த நவபாஷாண சிலையின் மேல் அபிஷேகம் நவபாஷாணங்களை வைத்துக் கட்டப் பட்ட இச்சிலை போகர் எழுதி வைத்துப் பின்பற்றி வந்த ஆறு கால பூஜைகளையும் பூஜை விதிகளையும் இன்றளவும் மாறாமல் கடைபிடித்து வருகிறார்கள்(8)

## முடிவுரை

ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்வும் இவ்வுலகில் ஒவ்வொரு பயணமே. ஒரு நெடுந்தூர ரயில் பயணத்தில் ஒரு நல்ல நண்பன் கிடைப்பது போல ஒவ்வொரு வரின் வாழ்விலும் அனுபவம் கிடைப்பது ஒரு சிறந்த பயணத்திற்கு அடையாள மாகும். சித்தர்களின் வாழ்வும் பயணமும் ஒருபோதும் சமூகத்தின் நடைமுறையில் இருந்து பிரிக்க முடியாதவை எனலாம். அதிலும் போகர் என்னும் சித்தரின் வாழ்வியலில் பயணம் ஒரு அரிய இலக்கியமாகவே திகழ்கிறது எனலாம். அவர்தம் ஒவ்வொரு பயணத்திலும் மக்களின் வாழ்வியல் நிலை உயரும் வண்ணம் அவர்களின் யோக முறை, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் மாற்றி வாழ்வினைத் தந்து நோய்களின் பிடியிலிருந்து காப்பாற்றி அருளிச் செய்தார் போகர் சித்தர் என்பதற்குச் சான்றாக அவர்தம் பயணங்கள் அமைகின்றன என்பது திண்ணம்.

## தொகுப்புரை

மருத்துவம் மட்டுமின்றி, அறிவியல், தொழில் நுட்பம் அதனோடு இயைந்த பயணம் இவை கொண்டு வாழ்ந்த ஒரு சித்தரே போகர். போகரும் பயணமும் என்றுமே பிரிக்க முடியாதவை என்றால் அது மிகையாகாது. ஒரு சித்தன் வாழ்வில் பயணம் என்பது எவ்வாறு இருக்கும் என்பதைக் காணலாம். பயணம் ஒரு இலக்கியமாகவோ, இலக்கணமாகவோ, தமிழாகவோ, யோகமாகவோ, சைவநெறியாகவோ இருந்திருக்கலாம் என்றால் அது சித்தர் வாழ்வில் உண்மையே.

## அடிக்குறிப்பு

- திருமந்திரம் (பா.2355)
- அதிசய சித்தர் போகர்( பக்.38)
- சப்தகாண்டம். (பா.2204)
- போகர் 7000 (பா.2214)
- போகர் 7000, (பா. 2215)
- போகர் ஏழாயிரம், (பா.6)
- அதிசய சித்தர் போகர், (ப.48)
- போகர் பூஜாவிதி, ப.102